# இதயம் ஓரம் மலரென உதிக்கும் ♥

❤ இதயம் ஓரம் மலரென உதிக்கும்
இதழின் ஓரம் கனியென இனிக்கும்
பருவம் பதின் கொடியென படரும்
பரவசம் மனதில் பதிலென பரவும்!

❤ சொல்லாது உள்ளம் உருகும்
கொல்லாது நெஞ்சம் துள்ளும்
திண்ணாது கண்கள் திணறும்
வெல்லாது அறிவும் வெட்கும்

❤ அச்சில் வார்த்த வெல்லம்தான்
எச்சில் முத்தம் இனிக்குதடி
பிடித்து சுவைத்த கரும்புதான்
கடித்து பார்த்தால் கசக்குதடி

❤ அள்ளி கொடுக்கிறேன் அன்பு
தள்ளி ஓடுகிறாய், ஏன் வம்பு!
சொல்லி கொடுத்துவிடு முத்தம்
அல்லி மலர்கையில், ஏன் சத்தம்?

❤ உயிரை கொஞ்சம் உலுக்குது
உயிரை கொஞ்சி உய்க்குது
உலகில் உயிர்கள் பூக்குது
உலகம் உன்னால் சுழலுது

❤ திசையெங்கும் பரவட்டும்
காதல் செய்யும் குறும்புகள்
தினந்தோறும் பூக்கட்டும்
காதல் மொட்டு அரும்புகள்!



2024